# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

கைத்தொழில்துறை 1992 இல் தொடர்ந்தும் அதன் உன்னத வளர்ச்சியைப் பேணியதுடன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளில் உயர்ந்த மட்டங்களைப் பதிவு செய்தது. 1991 இல் உண்மை நியதிகளில் 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த கைத்தொழில் வெளியீடுகளின் பெறுமதி 1992 இல் மேலும் 12 சதவீதத்தால் விரிவடைந்தது. இவ்வளர்ச்சி முழுவதும் தனியார்துறைக் கைத்தொழில்களிலிருந்தே கிடைத்தது. தனியார்துறைக் கைத்தொழிலின் வெளியீடு உண்மை நியதிகளில் 20 சதவீதத்தால் அதிகரித்ததுடன், இது 1985 இலிருந்து பதிவு செய்யப்பட்ட மிகக்கூடிய வளர்ச்சி வீதமாக விளங்கியது. இதற்கு முரணாக, அரச கைத்தொழிலின் வெளியீடு 19 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தனியார்துறையில், புடவைகளும் அணியும் ஆடைகளும், இரசாயனங்கள், இறப்பரும் பிளாத்திக்கும், உலோகமல்லாக் கனிப்பொருட்கள், தாளும் தாள் உற்பத்திகளும் ஆகியன உற்பத்தியில் பெரும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத்துறைகளாக விளங்கின. 1992 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் காணப்பட்ட கணிசமான வீழ்ச்சி பல முக்கியமான அரச துறைக் கைத்தொழில்கள் தனியார் மயமாக்கப்பட்டமையாலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கூடிய வீழ்ச்சியாலும் ஏற்பட்டது.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் ரூ. 507,360 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 757,760 இலட்சத்திற்கு அதிகரித்தது. மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் புடவைகள், அணியும் ஆடைகளின் பங்கு 1991 இன் 66 சதவீதத்திலிருந்து 1992 இல் 69 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## கைத்தொழில் கொள்கை

வரையறுக்கப்பட்ட வலயங்கள் அல்லது பிரதேசங்களிலிருந்து நாடு முழுவதற்குமான வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் இரண்டும் தொடர்பாக மேம்படுத்தும் மற்றும் வசதியளிக்கும் நடவடிக்கைகளை வழங்கும் அதிகாரித்த பொறுப்பைக் கொண்டதாய் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவின் தகுநிலை 1992 நவெம்பரில் முதலீட்டுச் சபை என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. குறைவிருத்திப் பிரதேசங்களில் தொழில்நிலை வசதிகளை உருவாக்குதல் மற்றும் முதலீடுகளைக் கவருதல் என்பனவற்றின் நோக்கில் ஓர் புதிய ஊக்குவிப்புத் தொகுதி 1992 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேசச் சபைப் பிரிவுகளில் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஆடைத் தொழிற்சாலைகள் 200 ஐ நிறுவுவதற்கான ஓர் திட்டம் 1992 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1990 இன் கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ், மாகாணங்களில் கைத்தொழில் மற்றும் அவை தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்தல், வசதியளித்தல், ஒருங்கிணைத்தல் என்பனவற்றிற்காக ஏழு பிரதேச கைத்தொழிற் பணிக்குழுக்கள் 1992 மாச்சில் அமைக்கப்பட்டன.

ஆரம்ப நிலையிலுள்ள கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்ட வரிச் சலுகைகளுக்குச் செவிமடுத்து 86 புதிய கைத்தொழில்களும், விரிவடைந்த இயலளவுடன் ஏற்கனவே இயங்கும் 174 கைத்தொழில்களும் 1992 திசெம்பரில் தொழிற்பாடு

களை ஆரம்பித்தன. தனியார் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்காகவும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டதுடன் இவற்றில் இரண்டு 1992இல் செயலிழந்தன.

தனியார் மயப்படுத்தலின் மீதான அரசின் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரசதுறைக் கைத்தொழில் பலவற்றை வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கூட்டு நிலையங்களாக மாற்றுவதற்கான ஒப்புதல் அமைச்சரவை யால் வழங்கப்பட்டது. இவை இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம், இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உராய்வு நீக்குப் பொறி, வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கூட்டு நிலையம், வரையறுக்கப்பட்ட இலங்கைப் பொசுபேற்று, தேசிய தாள் கூட்டுத்தாபனம், இலங்கைக் கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்கி யிருந்தன. வரையறுக்கப்பட்ட இலங்கை எண்ணெய்க் கொழுப்பு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நைலோன் 6 பொறி, வரையறுக்கப்பட்ட களனி டயர்கள், வரையறுக்கப்பட்ட வெயாங்கொடை புடவை ஆலை, வரை யறுக்கப்பட்ட இலங்கை மட்பாண்டம், வரையறுக்கப்பட்ட ககட்டகக காரீயம் என்பவற்றின் பெரும்பாலான பங்குகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்வி கோரல் சபைகளூடாக 1992 இல் முறையே ரூ. 810 இலட்சம், ரூ. 2,280 இலட்சம், ரூ. 4,000 இலட்சம், ரூ. 2,700 இலட்சம், ரூ. 1,120 இலட்சம், ரூ. 160 இலட்சம் பெறுமதிகளுக்கு விற்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட பூகொட புடவை ஆலைகள், வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன், வரையறுக்கப்பட்ட இலங்கை வடிசாலைக் கூட்டுநிலையம் என்பவற்றின் பெரும்பாலான அல்லது மிகுதியாகவுள்ள பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையூடாக ''முழுவதும் அல்லது ஒன்றுமற்ற அடிப்படையில்'' முறையே ரூ. 10.6 இலட்சம், ரூ. 6.2 இலட்சம், ரூ. 10.5 இலட்சப் பெறுமதிக்கு விற்கப்பட்டன. இத்துடன் ரூ. 4,950 இலட்சம், ரூ. 1,120 இலட்சம் பெறுமதி கொண்ட முறையே வரையறுக்கப்பட்ட இலங்கை வடிசாலைக் கூட்டுநிலையம், வரையறுக்கப்பட்ட போகல காரீயம் என்பவற்றின் பங்குகள் இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் பொதுமக்களுக்கு விற்பனைக்கு விடப்பட்டன.

**உற்பத்தி**

உண்மை நியதிகளில், 1992 இல் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 12 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலிய வெளியீட்டின் பெறுமதி நீக்கப்படுமிடத்து, கைத்தொழில் உற்பத்தியின் மதிப் பிடப்பட்ட விரிவாக்கம் 16 சதவீதமாக விளங்கியது.

1992 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த துணைத்துறை களாக புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (31 சதவீதம்), உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் (20 சதவீதம்), மர, மர உற்பத்திகள் (15 சதவீதம்), தாளும் தாள் உற்பத்திகளும் அடிப்படை உலோக உற்பத்தி கள் ஒவ்வொன்றும் (14 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (9 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (1 சதவீதம்) என்பன விளங்கின. வீழ்ச்சியைப் பதிவுசெய்த ஒரே ஒரு துறையாக இரசாயனம், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள் (5 சதவீதம்) விளங்கியது.

1992 இல் தனியார்துறைக் கைத்தொழிலின் மொத்த உற்பத்தி முன்னைய ஆண்டின் 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வளர்ச்சியானது புடவை அணியும் ஆடைகளும் தோலும்,

இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய மூன்று உற்பத்தி வகைகளிலிருந்து பெருமளவில் உருவாகியது.

புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் துணைத்துறையின் அனேகமாக எல்லா வெளியீடும் தனியார்துறைக் கைத்தொழில்களால் பங்களிக்கப்பட்டன. மூன்று ஆடைத் தொழிற்சாலைகள் ஓர் தோல் உற்பத்திப் பிரிவு என்பவற்றின் தனியார் மயமாக்கலும் இவ்வபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தது. புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையின் வெளியீட்டில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு, முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்றுமதி சார்ந்த ஆடைக் கைத்தொழிலில் ஏற்பட்ட விரைவான விரிவாக்கமும் உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கும் நடுத்தர சிறிய அளவிலான ஆடைக் கைத்தொழிலின் மேம்பாடடைந்த செயலாற்றமுமே காரணமாகும். இலங்கையின் மொத்த தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதிகளில் 35 சதவீதத்திற்கு வகைகூறும் அனுமதிப் பங்கற்ற ஆடை ஏற்றுமதிகள் குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கானவை (ஐ.பொ.ச.) துரிதமாக விரிவடைந்தமையே 1992 இல் இத்துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியது.

உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத்துறையின் மொத்த வெளியீட்டில் 80 சதவீதத்திற்கும் மேலாகப் பங்களிப்புச் செய்த தனியார்துறைக் கைத்தொழில்கள் 1992 இல் மேம்பட்ட செயலாற்றத்தைப் பதிவு செய்தன. மட்பாண்டம், சீமெந்து, கல்நார்த் தகடுகள், இரத்தினக்கற்கள் மற்றும் வைரங்கள் வெட்டலும் பட்டை தீட்டலும் என்பவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களில் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. எவ்வாறாயினும் கண்ணாடி, கண்ணாடி உற்பத்திகளின் தயாரிப்பு வெளியீட்டில் ஒரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத்துறையைப் பொறுத்தவரையில் இறப்பர் கூட்டுத்தாபனத்தின் உடைமை மாற்றப்பட்டமையாலும் 1992 இல் இவ்வகையில் அரச கைத்தொழில்துறைகளின் வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டமையாலும், மொத்த வெளியீட்டில் தனியார்துறையின் பங்கு கிட்டத்தட்ட அரைவாசிக்கு அதிகரித்தது. இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள், சவர்க்காரம், ஒப்பனைப் பொருட்கள், தீந்தைகள், பூச்சுக்கள், வேளாண்மை இரசாயனங்கள், வளமாக்கி என்பவற்றின் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களிலும் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன.

உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துறையின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு பொறியும் கருவியும், கம்பிகள், மின் பாவனைப் பொருட்கள், உருவமைக்கப்பட்ட உலோகம் என்பனவற்றின் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களின் மேம்பட்ட செயலாற்றத்தினால் முழுமையாக ஏற்பட்டதாகும். தாள், தாள் உற்பத்திகள் வகைகளில், மொத்த வெளியீட்டில் மூன்றில் இரண்டு பங்கு தனியார்துறைக் கைத்தொழில்களால் பங்களிப்புச் செய்யப்பட்டன. சுட்டுத் துண்டுகள், கேலிச் சித்திரங்கள், அஞ்சல் உறைகள் என்பவற்றின் அச்சிடல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களில் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன.

1992 இல் உணவு, குடிபானம், புகையிலை துணைத்துறையில் தனியார் துறைக் கைத்தொழில்கள் குறைந்த உற்பத்திச் செயலாற்றத்தைப் பதிவுசெய்தன. இதற்கு, இவ்வாண்டின் முற்பகுதியில் நிலவிய தொடர்ந்த வரட்சி ஓரளவு காரணமாக விளங்கியது. தனியார்துறைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் ஏற்பட்ட குறைந்த விரிவாக்கம் புகையிலை, சீனி, குடிவகை, பண்ணை உற்பத்திகள் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிகளால் பெரும்பாலும் ஏற்பட்டதாகும். இறைச்சி உற்பத்திகள், விசுக்கோத்து, மா, இனிப்புப் பண்டங்கள் என்பனவற்றைத் தயாரிக்கும் கைத்தொழில்கள் மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின.

நடைமுறை நியதிகளில், மொத்தக் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1992 இல் 23 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புடவை அணியும் ஆடைகள், தோல் என்பவற்றின் பெறுமதி 45 சதவீதத்தாலும், மர, மர உற்பத்திகள் 25 சதவீதத்தாலும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 21 சதவீதத்தாலும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், தாளும் தாள் உற்பத்திகளும் (ஒவ்வொன்றும்) 17 சதவீதத்தாலும், உணவு, குடிபானம், புகையிலை 14 சதவீதத்தாலும், அடிப்படை உலோக உற்பத்திகளும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகளும் (ஒவ்வொன்றும்) 12 சதவீதத்தாலும் அதிகரித்தன.

அட்டவணை 1.18

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1988–1992**

**(நடைமுறை விலைகள்)**


பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1988 | 1989 | 1990 | 1991(ஆ) | 1992(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 14,675 | 18,458 | 21,955 | 30,003 | 34,157 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 18,166 | 22,073 | 27,930 | 33,854 | 48,929 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 640 | 667 | 721 | 802 | 1,005 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 1,492 | 1,456 | 1,880 | 2,214 | 2,586 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 13,681 | 12,041 | 21,215 | 20,140 | 21,217 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) ... | 2,267 | 6,007 | 7,554 | 8,181 | 9,892 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 487 | 792 | 1,006 | 1,264 | 1,417 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 2,477 | 3,182 | 4,199 | 5,093 | 5,948 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 178 | 231 | 296 | 2,373 | 2,658 |
| **மொத்தம்** | 54,063 | 64,907 | 86,756 | 103,924 | 127,809 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) திருத்தப்பட்டது.

அரசதுறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி.

**அரசதுறைக் கைத்தொழில்கள்**

உண்மை நியதிகளில், அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு முன்னைய ஆண்டின் 8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 19 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1992 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி பல முக்கியமான அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் தனியார் மயப்படுத்தலினதும் மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 65 சதவீதத்திற்கு வகைகூறிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டது. பெற்றோலியம் நீக்கப்படுமிடத்து அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீடு 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.19

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் 1990—1992**
**(1977 = 100)**

| வகை | 1990 | 1991 | 1992(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 22.6 | 18.3 | 13.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 96.0 | 66.6 | 27.5 |
| 2.1 புடவைகள் ... | 128.6 | 90.5 | 37.9 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 27.4 | 12.3 | 20.5 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 118.1 | 137.4 | 156.6 |
| 5. இரசாயன உற்பத்திகள் ... | 122.4 | 111.9 | 87.6 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் ... | 124.3 | 113.1 | 92.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 137.5 | 143.5 | 142.4 |
| 6.1 சீமெந்து ... | 156.6 | 171.4 | 179.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 80.3 | 111.5 | 125.7 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 33.6 | 17.4 | — |
| எல்லா வகைகளும் ... | 100.0 | 91.6 | 73.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | 73.1 | 67.6 | 52.5 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாக அரச இறப்பர் தயாரிப்பு (40 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (18 சதவீதம்), இலங்கைக் கனிப்பொருள் மணல் (34 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (3 சதவீதம்) என்பன விளங்கின.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி, மசகு வடிக்கும் அலகின் ஒரு முக்கிய திருத்தவேலை காரணமாக 1992 இன் இரண்டாம் அரைப்பகுதியில் 14 கிழமைகளுக்குத் தூய்மி மூடப்பட்டமையினால் ஏற்பட்டது. இவ்வாண்டில் நிலவிய பாதகமான கால நிலைகள் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையத்தின் வெளியீட்டில் ஓர் வீழ்ச்சியை விளைவித்தன. இலங்கை கனிப்பொருள் மணல்

கூட்டுநிலையத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, இப்பிரதேசத்தில் நிலவும் பாதகமான பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக மணலின் வழங்கல் குறைவடைந்தமையால் பெரும்பாலும் ஏற்பட்டதாகும்.

அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளில், இவ்வாண்டில் உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த விடயங்களாக இலங்கை உப்பு (159 சதவீதம்), அரச மரம் (66 சதவீதம்), தேசிய தாள் (14 சதவீதம்), இலங்கை உருக்கு (13 சதவீதம்), இலங்கைச் சீமெந்து (5 சதவீதம்) என்பன விளங்கின.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு இவ்வாண்டில் சிலிப்பர் கட்டைகள், மின் கடத்தித் தூண், அரிந்த மரம் என்பவற்றிற்கான கேள்வியில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பால் பெரும்பாலும் ஏற்பட்டதாகும். எம்பிலிப்பிட்டியா, வாழைச்சேனை ஆலைகள் இரண்டினதும் மேம்பட்ட செயலாற்றம் தேசிய தாள் கூட்டுத்தாபனத்தில் அதிகரித்த உற்பத்தியை விளைவித்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை உப்புக் கூட்டு நிலையத்தின் அதிகரித்த வெளியீட்டு மட்டம் இவ்வாண்டில் நிலவிய சாதகமான கால நிலைகளின் விளைவால் ஏற்பட்டதாகும். இவ்வாண்டு முழுவதிலும் மூலப்பொருட்களின் போதுமான வழங்கல் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் மேம்பட்ட வெளியீட்டு மட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டது.

அரசதுறைத் தொழில் முயற்சிகளின் துறைவாரியான பகுப்பு நியதிகளில் 1992 இல் மர, மர உற்பத்திகள்துறை அதி உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. (66 சதவீதம்). வெளியீட்டில் அதிகரித்த மட்டங்களைப் பதிவுசெய்த ஏனைய துறைகளாகத் தாள், தாள் உற்பத்திகள் (14 சதவீதம்) அடிப்படை உலோக உற்பத்திகள் (13 சதவீதம்), என்பன விளங்கின. வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த துறைகளாக உணவு, குடிபானம், புகையிலை (26 சதவீதம்), இரசாயன உற்பத்திகள் (22 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (1 சதவீதம்) என்பன விளங்கின.

இவ்வாண்டில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட மாற்றல்கள் ரூ. 740 இலட்சமாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டின் அளவுடன் ஒப்பிடுகையில் 61 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் தேசிய புடவைக் கூட்டுத்தாபனமும் தேசிய தாள் கூட்டுத்தாபனமும் முறையே ரூ. 420 இலட்சத்தையும் ரூ. 320 இலட்சத்தையும் மூலதன மாற்றல்களாகப் பெற்றுக் கொண்டன.

**கூட்டப்பட்ட பெறுமதி**

நடைமுறை நியதிகளில் கைத்தொழிலின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் 23 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 24 சதவீதத்தால் அதிகரித்தது. கூட்டப்பட்ட பெறுமதி, வெளியீட்டின் தொழிற்சாலைப் பெறுமதியிலிருந்து மூலப் பொருட்கள், வலுவும் எரிபொருளும் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்டது.

## அட்டவணை 1.20

### கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1990—1992

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 (அ) | 1990 | 1991 | 1992 (அ) | 1990 | 1991 | 1992 (அ) |
| 1. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ... | 35.4 | — | — | — | — | — | 35.4 | — | — |
| 2. இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | — | 0.1 | — | — | 0.1 | — |
| 3. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் ... | 42.0 | 42.0 | 42.0 | — | — | — | 42.0 | 42.0 | 42.0 |
| 4. இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | — | 4.0 | — | — | 4.0 | — |
| 5. தேசிய தாள் கூட்டுத்தாபனம் ... | — | — | 32.0 | — | — | — | — | — | 32.0 |
| மொத்தம் ... | 77.4 | 42.0 | 74.0 | — | 4.1 | — | 77.4 | 46.1 | 74.0 |

(அ) மதிப்பிடப்பட்டவை.

மூலம்: திறைசேரி

அட்டவணை 1.21

**கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி 1988—1992**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | | 1988 | 1989 | 1990 | 1991(ஆ) | 1992(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | ... | 8,225 | 10,168 | 12,065 | 15,070 | 17,340 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | ... | 4,797 | 5,746 | 7,167 | 8,542 | 13,260 |
| 3. மா, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) | ... | 463 | 496 | 485 | 571 | 677 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | ... | 751 | 745 | 1,019 | 1,167 | 1,397 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | ... | 3,827 | 3,531 | 2,428 | 3,199 | 3,416 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) | ... | 1,308 | 1,218 | 4,742 | 4,905 | 5,918 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | ... | 71 | 77 | 194 | 248 | 263 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | ... | 1,518 | 1,969 | 2,746 | 3,247 | 3,629 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் (வே. எ.கு.) | ... | 90 | 117 | 138 | 1,092 | 1,196 |
| மொத்தம் | ... | 21,050 | 24,067 | 30,984 | 38,041 | 47,096 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) திருத்தப்பட்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1992 இல் தயாரிப்புக் கைத்தொழிலின் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ. 470,960 இலட்சமாக விளங்கியது. வெளியீட்டுப் பெறுமதியின் சதவீத மாக 1992 இல் சராசரிக் கூட்டப்பட்ட பெறுமதி 1991 இல் பதிவுசெய்த அதே விகிதத்தில் 37 சதவீதமாக இருந்தது. 50 சதவீதத்திற்கும் கூடுதலாசக் கூட்டப்பட்ட பெறுமதி விகிதத்தைக் கொண்ட கைத்தொழில் வகைகளாக் மர, மர உற்பத்திகள் (67 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (61 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (60 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (51 சதவீதம்), தாள், தாள் உற்பத்திகள் (54 சதவீதம்) என்பன விளங்கின. 50 சதவீதத்திற்கும் குறைவான கூட்டப்பட்ட பெறுமதி விகிதத்தை புடவை, அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் (27சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (19 சதவீதம்), பெற்றோலியமும் இரசாயன உற்பத்திகளும் (16 சதவீதம்) ஆகிய வகைகள் கொண்டிருந்தன.

**வலுவும் எரிபொருளும்**

1992 இல் இலங்கை மின்சபைக்கானவை தவிர்ந்த கைத்தொழில் எரி பொருள் விற்பனைகள் 21 சதவீதத்தால் அதிகரித்தன. 1992 இல் பார டீசல், உலையெண்ணெய் என்பனவற்றின் விற்பனைகள் முறையே 16 சதவீதத்தாலும் 65 சதவீதத்தாலும் அதிகரித்தன.

*அட்டவணை 1.22*

**கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட வலுவும், எரிபொருளும் 1991—1992**

| விடயம் | 1991(ஆ) | 1992(அ) |
|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) (இ) ... ... ... | 958.3 | 1,047.4 |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... ... | 67.4 | 74.7 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... ... | 494.3 | 504.3 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... ... ... | 396.6 | 468.4 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ... ... | | |
| ('000 மெற்றிக் தொன்கள்) (ஈ) ... ... ... | 192.2 | 231.8 |
| 2.1 பார டீசல் ... ... ... | 17.7 | 29.2 |
| 2.2 உலை எண்ணெய் ... ... ... | 174.5 | 202.6 |

மூலங்கள்: இலங்கை மின் சபை.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) தயாரிப்பு, ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் 50 கி. வா. அ. இற்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வா. அ. ஐயும் பெரும் கைத்தொழில் 500 கி. வா. அ. இற்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.
(ஈ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.

1992 இல் கைத்தொழிலில் மின் பாவனை 9 சதவீதத்தால் அதிகரித்தது. இது சிறு அளவுக் கைத்தொழில்களில் 11 சதவீதம், நடுத்தர அளவுக் கைத்தொழில்களில் 2 சதவீதம், பாரிய கைத்தொழில்களில் 23 சதவீத அதிகரிப்புக் களைக் கொண்டிருந்தது.

## கைத்தொழில்களுக்கான வசதிகள்

ஆய்விற்குரிய ஆண்டில் கைத்தொழில்துறை சலுகை நியதிகளில் தொடர்ந்தும் நிதி உதவிகளைப் பெற்றது. தேசிய அபிவிருத்தி வங்கியின் சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டமே கைத்தொழில்கள் நிதி உதவியினைப் பெற்றுக் கொண்ட மிகப் பெரிய மீள் நிதியிடல் நிகழ்ச்சித் திட்டமாகும். மேலதிகமாக, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் தேசிய அபிவிருத்தி வங்கியும், வர்த்தக வங்கிகளும் கடன்கள் மற்றும் பங்குடைமைப் பங்கேற்பு என்பனவற்றின் வடிவில் கைத்தொழில் முயற்சிகளுக்கு நேரடி நிதி வசதிகளை வழங்கின.

1992 திசெம்பர் இறுதியில் மத்திய வங்கி சிறிய அளவுக் கைத்தொழில்கள் மற்றும் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்கள் I, II, III, IV என்பன தொடர்பாக ரூ. 50,050 இலட்சம் கொண்ட கடன் பகிர்ந்தளிப்புக்களை உள்ளடக்கும் வகையில் 10,718 உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. ஆண்டின் இறுதியில் 3,157 கடன்கள் தொடர்பாக ரூ. 7,440 இலட்சம் கொண்ட தொகை முழுமையாக மீளப் பெறப்பட்டது. வெளிநின்ற கடன்கள் வகையைப் பொறுத்தவரையில் 6,200 கடன்கள் தொடர்பாக ரூ. 22,670 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப்படாது காணப்பட்டது. 1992 இறுதியில் 416 உரிமைக் கோரல்களின் தீர்ப்பனவுக்காக மத்திய வங்கி ரூ. 490 இலட்சம் கொண்ட தொகையைச் செலுத்தியிருந்தது.

அட்டவணை 1.23

## தேசிய அபிவிருத்தி வங்கியினால் இசைவளிக்கப்பட்ட மீள் நிதியிடல், நிதியியல் உதவிக்கான ஒப்புதல்கள்—1992

| வகைகள் | மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் சி.ந.கை. செயல் திட்டம் IV | | நேரடி நிதியியல் உதவி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | தொகை (ப.இ.ரூ.) | எண். | தொகை (ப.இ.ரூ.) | எண். | தொகை (ப.இ.ரூ.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 442 | 217.46 | 24 | 416.54 | 466 | 634.00 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் ... | 197 | 143.85 | 95 | 1,182.99 | 292 | 1,326.84 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 131 | 47.66 | 7 | 14.04 | 138 | 61.70 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 72 | 40.72 | 2 | 50.00 | 74 | 90.72 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 64 | 55.61 | 26 | 184.51 | 90 | 240.12 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 107 | 41.35 | — | — | 107 | 41.35 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 159 | 80.36 | 43 | 606.86 | 202 | 687.22 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | — | — | — | — | — | — |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 911 | 379.62 | 115 | 1,552.51 | 1,026 | 1,932.13 |
| மொத்தம் ... | 2,083 | 1,006.63 | 312 | 4,007.45 | 2,395 | 5,014.08 |

மூலம்: தேசிய அபிவிருத்தி வங்கி.

கடன்கள் மற்றும் பங்குடைமை மூலதனம் என்பனவற்றின் மூலமாகத் தேசிய அபிவிருத்தி வங்கி கைத்தொழிற் செயற்றிட்டங்களுக்கு நேரடி உதவிகளை வழங்குகின்றது. தேசிய அபிவிருத்தி வங்கி நேரடி நிதியியல் உதவியாக 1991 இல் வழங்கிய ரூ. 27,710 இலட்சம் செலவுடைய 213 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 40,070 இலட்சம் செலவினைக் கொண்ட 312 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இந்த உதவியின் பெரும் பங்கைப் பெற்றுக் கொண்ட கைத்தொழில் வகைகளாகப் புடவை, அணியும் ஆடைகளும் காலணிகளும், அடிப்படை உலோக உற்பத்திகள், உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள் என்பன விளங்கின.

கடன்கள், பங்குரிமை மூலதனம் என்பனவற்றின் மூலமாகக் கைத்தொழில் துறைக்கு ரூ. 25,770 இலட்சம் கொண்ட 331 செயற்றிட்டங்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஒப்புதலளித்தது. இந்த உதவியின் பெரும் பங்கினைப் பெற்றுக் கொண்ட கைத்தொழில்களாக உணவு, குடிபானம், புகையிலை, இறப்பரும் பிளாத்திக்கு உற்பத்திகளும், அணியும் ஆடைகளும், தோல் உற்பத்திகளும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பன விளங்கின.

1992 இல் வர்த்தக வங்கிகளும் கைத்தொழில்களுக்குத் தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் ரூ. 134,830 இலட்சத்திலிருந்து 1992 செத்தெம்பர் இறுதியில் ரூ. 144,410 இலட்சத்திற்கு 7 சதவீதத்தால் அதிகரித்தன.

**வெளிநாட்டுத் தனியார் முதலீடு**

''ஒருமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு மேம்பாட்டு நிலையமாகப்'' பணிபுரியும் முதலீட்டுச் சபை (மு.ச.) இரண்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ்ப் பலவகையான ஊக்குவிப்புக்களையும் சலுகைகளையும் தொடர்ந்து வழங்கியது. 1992 இல் மு. சபை கொ.பெ.பொ. ஆணைக் குழுவின் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் (சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம்) 201 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1992 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக் கையை 702 இற்குக் கொண்டு வந்தது. இவற்றில், பலதரப்பட்ட கைத்தொழில் களை அமைப்பதற்காக மு. சபையுடன் 398 செயற்றிட்டங்கள் தொடர்பாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. 1992 இறுதியில் மொத்தமாக 211 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் இருந்தன. உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவற்றில் 79 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும், 38 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும், 8 கொக்கலை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் 86 நாட்டின் ஏனைய பாகங்களிலும் காணப்பட்டன.

1992 இல் மு. சபை தொழில் முயற்சிகளின் தொழில்நிலை 22 சதவீதத் தால் அதிகரித்ததுடன் இத்தொழில் முயற்சிகளின் தொழில் நிலையின் மொத்த எண்ணிக்கையை 104,221 ஆட்களுக்குக் கொண்டு வந்தது. இவற்றில் 65,465 அல்லது 63 சதவீதம் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்தித்துறையில் ஈடுபட்டிருந்தனர். மு. சபை தொழில் முயற்சிகளின் மொத்தத் தொழில் நிலை யில் தைத்த ஆடைகள் அல்லாத் துறையின் தொழில்நிலையின் சார்புரீதியான பங்கு 1991 இன் 37 சதவீதத்திலிருந்து 1992 இல் 40 சதவீதத்திற்கு அதிகரித் தது. இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பரும் பிளாத்திக்கு உற் பத்திகளும், தாளும் தாள் உற்பத்திகளும், உணவு, குடிவகைகள், புகையிலை உற்பத்திகள் என்பன கைத்தொழில் வகைகளின் தொழில்நிலை உருவாக்கத்தில் அதியுயர் வீதத்தைப் பதிவு செய்தன.

1992 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எதிர்பார்த்த முதலீடு ரூ. 176,100 இலட்சமாக விளங்கியது. யப்பான், கொறியா, சிங்கப்பூர் கொங்கொங், இத்தாலி, தாய்வான், மலேசியா, ஜேர்மனி, பாகித்தான், பேமுடா, நெதர்லாந்து, துபாய் போன்ற பல நாடுகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வந்தனர். 1992 இல் மு. சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ஆயுர்வேத மருந்துகளின் தயாரிப்பு, படச் சட்டங்கள், உந்து ஊர்தி உதிரிப்பாகங்கள், இறப்பர் உற்பத்திகள், பருத்தியல்லா துணிகள், தும்பு, நிலக்கரிப் பாளங்கள், போலிக் கண் இமைகள், பஞ்சடைத்த பொம்மைகள், இரத்தினக்கல் பதிக்கப்பட்ட ஆபரணங்கள், காலணி, தாளும் தாள் உற்பத்தி களும், மின் பாவனைப் பொருட்கள், புகையிலை உற்பத்திகள், வைரங்களை வெட்டலும் பட்டை தீட்டலும் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் வரி தொடர்பான விதிகள் (பொதுவான ஊக்குவிப்புக்கள் திட்டம்) இன் கீழ் மு. சபை 1992 இல் 78 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களிலான மொத்த எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ரூ. 17,660 இலட்சமாக விளங்கியதுடன் இதில் வெளிநாட்டுக்கூறு ரூ. 8,630 இலட்சமாகவும், உள்நாட்டுக்கூறு ரூ. 9,030 இலட்சமாகவும் விளங்கியது. இத்தொழில் முயற்சிகளில் தொழில் நிலையின் உள்ளார்ந்த வளம் 6,417 ஆட்களாக விளங்கியது.

மு. சபைத் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1992 இல் ரூ. 432,640 இலட்சமாக (சிஎஉ 7,010 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டைவிட 96 சதவீத அதிகரிப்பைக் காட்டின. சிஎஉ நியதிகளில் இவ்வதிகரிப்பு 79 சதவீதமாகும். புடவை மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி வருவாய்கள்

அட்டவணை 1.24

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்—தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும் 1991—1992**

| வகை | 1991 | | 1992 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப. இ. ரூ.. | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப இ ரூ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 2,168 | 1,235 | 2,536 | 2,361 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 54,214 | 14,481 | 65,465 | 26,689 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 52 | 10 | 58 | 17 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் அச்சிடலும், வெளியிடலும் ... | 127 | 9 | 150 | 41 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 5,390 | 1,088 | 7,537 | 2,985 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 6,069 | 1,871 | 6,940 | 4,401 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 1,465 | 687 | 4,652 | 1,250 |
| 8. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 11,055 | 1,768 | 10,711 | 4,452 |
| 9. பணிகள் (ஆ) ... | 4,917 | 944 | 6,171 | 1,068 |
| மொத்தம் ... | 85,457 | 22,093 | 104,220 | 43,264 |

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வரையறுக்கப்பட்ட "ஏயர் லங்கா" நீங்கலாக.

முன்னைய ஆண்டின் மட்டத்தைவிட 84 சதவீதம் அதிகமாக விளங்கி, மு. சபை தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 62 சதவீதத்திற்கு வகைகூறி தொடர்ந்து முக்கிய வெளிநாட்டுச் செலாவணிப் பெறுநராகக் காணப் பட்டது. புடவை மற்றும் ஆடைத்துறையில் ஊழியர் ஒருவருக்கான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ. 267,108 உடன் ஒப்பிடுகையில் ரூ. 407,683 ஆக விளங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் ஆடை தவிர்ந்த தொழில் முயற்சிகளின் ஏற்றுமதிப் பெறுமதி 118 சதவீதத்தால் அதிகரித்தது.

இவ்வாண்டில் இந்தியா, நெதர்லாந்து, தென் கொறியா, கொங்கொங், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. இலங்கையின் பல்வகையான முதலீட்டுச் செயற்றிட்டங்களை ஊக்கு விக்கும் நோக்கில் இவ்வாண்டு பல முதலீட்டு மேம்பாட்டுக் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.